## புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் - 2014

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

பணியகத்துடன் இணைக்கப்பட்ட ரூபா 108,452,724 தொகையான தேறிய சொத்துக்களுடனான கம்பனியொன்றில் 66 சதவீத உரித்தொன்று பணியகத்திற்கு இருந்த போதிலும், அக்கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைத்து ஒன்றிணைந்த நிதிக்கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை**

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01**

பூமி அதிர்ச்சியை அளவிடல் கோபுரங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளுக்காக அமெரிக்காவின் பல்கலைக்கழகமொன்றிலிருந்து 2000 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 6,665,050 ஆன தொகையை அடுத்து ஆண்டினுள் தீர்வுசெய்ய முடியாதிருந்த போதும், நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைப் பொறுப்பொன்றாக காணப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02**

மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கையேற்பதற்கும் நடைமுறை வேலைகளுக்கும் செலவிடப்பட்டிருந்த உள்ளவாறான தொகை ரூபா 29,616,552 ஆக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 43,673,921 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் நடைமுறைவேலைக் கணக்கிலிருந்து கட்டிடங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 17,900,845 ஆன பெறுமதியில் மீளாய்வாண்டில் நடைமுறை வேலைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,843,476 தொகையைக் கழித்து ரூபா 14,057,369 ஆன நடைமுறை வேலைகளில் காசுப் பெறுவனவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் பிழையான முறையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02**

முன்னைய ஆண்டுகளுக்குரிய கணக்கீட்டுக் கொள்கை, கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் தவறுகள் காரணமாக முன்னைய காலப்பகுதிக்குரிய மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் ஒப்பீட்டு ரிதியாக மீண்டும் காட்டுமாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டியதுடன், அத்தவறுகளைச் சீராக்குதல்

விபரமான குறிப்புக்கள் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும் பணியகத்தினால் முன்னைய ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 108,286,341 ஆன பிழைகள் திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டிற்குரிய ஒப்பீட்டுத் தகவல்கள் இருந்த போதிலும், அது தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07**

மீளாய்வாண்டின் போது ரூபா 477,156,170 கிரயமான 5 வகைகளுக்குரிய சொத்துக்கள் ரூபா 535,099,270 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும். அது தொடர்பாக மீள் மதிப்பீடு செய்யப்பபட்ட திகதி, சுதந்திரமான மற்றும் தகைமையுடைய மதிப்பீட்டாளரொருவரால் மேற்கொள்ளப்பட்டதாகவும், சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் போது பயன்படுத்திய விசேட எடுகோள்கள் மற்றும் சொத்துக்களின் நியாயமான பெறுமதி முதீர்மானிக்க வேண்டிய மறை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09**

இருப்புக்களின் கிரயமோ அல்லது தேறிய கைக்கெட்டிய பெறுமதி இரண்டிலும் மிகவும் குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் இருப்பு மதிப்பீடு தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கை

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் அரசிறை பெறுவனவுகள் அதற்குரிய உடன்படிக்கை நியதிகளின் பிரகாரம் அட்டுறு அடிப்படையின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டிய போதிலும், பணியகத்தால் இதற்காக காசு அடிப்படை பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வழங்கப்பட்டிருந்த 1400 அனுமதிப்பத்திரங்களுக்காக அரசிறை கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 71,322,061 கூட்டுத்தொகையான செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் சீராக்கமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உத்தேச அமைச்சுக் கட்டித்தின் நிர்மாணத்திற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 55,000,000 ஆன தொகை பொது திறைசேரிக்கு அனுப்பப்பட்ட பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொகைகளில் ரூபா 1,300,910 தொகையை பயன்படுத்தி ஊழியர் இடர்கடன் நிதிய பணியகத்தின் பெயரில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், நிதியம் மற்றும் முதலீட்டுக் கணக்குகளில் விடுபட்டிருந்தன.

(ஈ) பூமி அதிர்ச்சியை அளவிடல் கோபுரங்களுக்காக வெளிநாடுகளிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த உபகரணங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்களுக்காக செலவிடப்பட்டிருந்த

ரூபா 6,542,303 ஆன சுங்கக் கட்டணம் உட்பட ஏனைய செலவினங்கள் முதலீடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 60,823,367 | ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கு அடிப்படையாகக் கொண்ட செயற்திட்ட இலாபம் கணிப்பதற்குரிய விபரங்கள், வருமானம் மற்றும் செலவினப் பட்டோலைகள் |
| (ஆ) | பதவியணியினர் போக்குவரத்துச் செலவினம் | 975,330 | ஓட்டப் பதிவுப் பத்திரங்கள் |
| (இ) | கட்டிட வாடகை வருமானம் | 1,080,000 | வாடகை ஒப்பந்தம் |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்க ளுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் அதிகாரச் சட்டத்தின் 28(1) ஆம் பிரிவு | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் 2008 ஆம் ஆண்டி லிருந்து கடல் மணல் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதற்காக பணியகத்திடமிருந்து வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந் நிறுவனத்தினால் தயார் செய்யப்பட்டிருந்த போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை உபயோகித்து மணல் போக்குவரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் பணியகம் அது தொடர்பாக தேவையான எவ்வித நடைமுறைகளையும் எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் 6(2)(அ) பந்தி | உத்தியோகத்தரால் இறுதியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பளத்தின் 14 நாட்களுக்குச் சமமான பணத்தை சேவைக்காலத்தினால் பெருக்கி செலுத்த வேண்டிய பணிக்கொடை கணக்கிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 30 நாள் |

| | | |
|---|---|---|
| | | சம்பளம் கருத்திற் கொள்ளப்பட்டு பணிக் கொடைக்காக ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்கள் தொகுதியுடன் ஆண்டறிக்கையின் பிரதியொன்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | குறித்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 219,735,981 தொகை திறைசேரி உண்டியல்களிலும், ரூபா 579,077,890 தொகை நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (உ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம் | 2006 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாதிருந்த ரூபா 149,117,003 அரசிறை முற்பணத் தொகைகளுக்கும் 1993 ஆண்டிலிருநது மீளாய்வாண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 81,290,903 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணங்களுக்கும் உரிய ரூபா 23,980,451 பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையினை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்<br><br>நிதிப்பிரமாணம் 104(2) | மீளாய்வாண்டின் போது பணியகத்தின் இரண்டு வாகனங்கள் விபத்திற்குட்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |
| (எ) | 1994 யூன் 30 ஆந் திகதிய 30 ஆம் இலக்க பொது நிரவாகச் சுற்றறிக்கை | வெளிநாட்டு உதவிகள் பெறுவனவுகள் வெளிநாட்டு வளப் பணிப்பாளர் நாயகத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், பூமி அதிர்ச்சி அளவீட்டு கோபுரங்களுக்காக ஜேர்மனிடமிருந்தும் அமெரிக்காவிடமிருந்தும் கிடைக்கப் பெற்றிருந்த உபகரணங்கள் மற்றும் பணம் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஏ) | 2001 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 15/2001 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | கம்பஹா பிராந்திய அலுவலகத்தின் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவுசெய்வதற்காக 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் அறிக்கையிடும் திகதி வரை நேரப்பதிவு இயந்திரமொன்று பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (ஐ) | 2014 மார்ச் 31 ஆந் திகதிய 08/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 (அ) பிரிவு | நிர்ணயிக்கப்பட்ட சேவை மணித்தியால அளவினை மேவுகை செய்யாமல் சேவை நிலையத்திலிருந்து வெளியேறியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஒ) | 2011 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அடுத்துவரும் 06 மாத காலப்பகுதிக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டிற்காக போதியளவில் பணத்தை வைத்துக்கொண்டு எஞ்சிய அனைத்து மிகைப் பணத்தையும் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2013 யூன் 17 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவிஉயர்வு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட மீளமைப்பு முன்மொழிவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | 2013 யூன் 28 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக 02 புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டு இரண்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டி ருந்தனர். அதற்காக மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 118,379 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (க்) | 1996 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய பீஈ1/000/6 ஆம் இலக்க நிதி அமைச்சின் கடிதம் | நிலத்தை துளையிடல் மற்றும் பெற்றோலிய ஆராய்ச்சி செயற்திட்டங்களின் தேறிய உழைப்புக்களிலிருந்து 50 சதவீதம் வரை ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், அதற்கு முரணாக பணியகத்தினால் சாதாரண அனுமதிப்பத்திரங் களுக்காக மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளுக்குரிய பரிசோதனைக் கட்டணம் (Inspection charges), பரிசோதனை வெடிப்புக் கட்டணம் (Test Blast charges) மற்றும் இரசாயனகூட வருமானம் அனைத்தும் நிலத்தை துளையிடல் மற்றும் பெற்றோலிய ஆராய்ச்சி செயற்திட்டங்களின் தேறிய உழைப்பாகக் கருதி ரூபா 60,823,367 தொகை அதிகாரமில்லாமல் |

தவறாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 842 மில்லியன் தேறிய இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் வரிக்கு முன்னர் தேறிய இலாபம் ரூபா 624 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 218 மில்லியன் அதிகரிப்பொன்று தென்பட்டது. அரசிறை வருமானம் ரூபா 453 மில்லியனாலும் செயற்திட்ட வருமானம் ரூபா 9 மில்லியனாலும் அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்கு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.3 பகுப்பாய்வுடன் கூடிய நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அகழ்வின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய 2 சதவீத அரசிறைத் தொகை 4 சதவீதம் வரை அதிகரித்தமையால் மீளாய்வாண்டின் அரசிறை வருமானம் ரூபா 453 மில்லியனால் அல்லது 66 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பணியகத்தின் மொத்த செலவினம் மீளாய்வாண்டினுள் ரூபா 196 மில்லியனால் அதாவது 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. பணியகத்தின் நிர்வாகச் செலவினம் ரூபா 139 மில்லியனால் அதாவது 50 சதவீதத்தினால் மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தமை இச்செலவின அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பணியகத்தினால் செயற்படுத்தப்பட்ட பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசிறைப் பணத்தை அறவிடல் :

(i) இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கடல் மணலை அகழ்வதற்காக விநியோகிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரமொன்றிற்காக மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குரிய அறவிடப்பட வேண்டிய அறவிடப்பட வேண்டிய ரூபா 44,727,062 ஆன அரசிறைத் தொகை மற்றும் தாமதக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முன்னைய ஆண்டுகளுக்குரிய வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் அகழ்வு செய்யப்பட்டிருந்த 3,750,074 கனமீற்றர் கடல் மணல் இருப்பொன்றிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 100 மில்லியன் இற்கு மேற்பட்ட அரசிறை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,133,601,622 தொகை அரசிறைப் பணமாக சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரிக்கு ரூபா 650,000,000 தொகை மாத்திரம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(iii) கருங்கல் அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்காக அரசிறை கணப்பீட்டின் போது பணியகத்தினால் வெடிபொருட்கள் கட்டுப்பாட்டாளரிடமிருந்து அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டிருந்தது. இம்முறைமை ஆக்கபூர்வமான மற்றும் செயற்திறனான முறையொன்றல்லாததாக இருந்தமையால் இதன் காரணமாக கருங்கல் அகழ்விற்காக கருத்திற் கொள்ளக்கூடிய அரசிறைத் தொகையொன்று இழக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) பணியகத்தினால் கணிப்பொருட்களின் சந்தைப்பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அரசிறை கணக்கிடப்பட்ட போதிலும் 2011 ஆம் ஆண்டின் பின்னர் அப்பெறுமதிகள் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆய்வு நடவடிக்கைகளுக்காக வெவ்வேறு காணிகளை ஒதுக்குதல்.

(i) 2003 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆய்வு நடவடிக்கைகளுக்காக காணிகளை விடுவிப்பதற்கான பரிந்துரைகள் கிடைக்கப்பெறாத 96 விண்ணப்பங்களுக்குரிய ரூபா 5,656,685 தொகையை மீளச் செலுத்தும் போது அவ்விண்ணப்பங்களுக்குரிய ஒதுக்கப்பட்டிருந்த காணி பிரதேசங்களில் எதுவித களப் பரிசோதனையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் ஆய்வு விண்ணப்பபடிவங்களை நிராகரித்தற்கு எதிராக அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேன்முறையீடுகள் அமைச்சினால் நிராகரிக்கப்பட்டிருக்கையில் 15 புதிய விண்ணப்பங்கள் பரிந்துரையொன்று இல்லாமல் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.

(ii) மேற்படி பணியகத்தின் மூலம் விசேடமாக கடற்கரையை அண்மித்து ஆய்வு நடவடிக்கைகளுக்காக காணி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆய்வு நடவடிக்கைகளின் செயன்முன்னேற்ற அறிக்கையோ அல்லது கண்டுபிடிக்கப்பட்ட கணிய வளங்கள் தொடர்பாக அறிக்கைகளையோ பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆய்வு நடவடிக்கைகள் இறுதியில் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொன்றும் இடம்பெற்றிருக்கவில்லை. பணியகம் இவ்வாறு காணிகளை ஒதுக்கி வழங்கியதால் அத்துமீறிய அகழ்வு மேற்கொள்வதில் கூடிய ஆபத்தொன்று காணப்பட்ட போதிலும், அது தொடர்பாக எதுவித பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் கட்டணங்களை அறவிடுதலும்

(i) அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு முன்னர் இருக்க வேண்டிய தேவைப்பாடுகள் முழுமையாக இல்லாதிருக்கையிலும் பணியகத்தினால் அனுமதிப்பத்திரத்துடன் சேர்த்து முழு அனுமதிப்பத்திரக்கட்டணத்துடன் அதற்குரிய பெறுமதி சேர் வரி மற்றும் முத்திரைக் கட்டணம் உட்பட அறவிடப்பட்டிருந்தது. இதற் மேலதிகமாக 2006 ஆம் ஆண்டிலிருந்து அனுமதிப்பத்திரத்தின் மூலம் அகழ்ந்தெடுக்கடும் கணிய வளங்களின் அளவு அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய அரசிறைத் தொகைக்காக முற்பணத் தொகையொன்று அறவிடப்பட்டிருந்தது. எனினும் அரசிறை முற்பணத்திற்காக கொடுப்பனவு செய்வதற்கு உள்ள பெறுமதி சேர் வரித்தொகை 2015 சனவரி மாதம் வரையிலும் விண்ணப்பதாரிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) சட்டவிரோத அகழ்வுகளை கட்டுப்படுத்துவதற்காக பணியகத்தினால் சுற்றி வளைப்பு பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்தமையால் நாடளாவிய ரீதியில் அடிக்கடி அத்துமீறிய அகழ்வுகள் இடம்பெற்ற போதிலும், அதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறியிருந்தது.

(iii) அகழ்வினை மேற்கொள்வதற்கு முன்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் வழங்கப்படுகின்ற சுற்றாடல் விடுவிப்பு சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அநேகமான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது இந்த சுற்றாடல் விடுவிப்பு சான்றிதழ் இல்லாமலே அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) இரசாயன உபகரணக் கட்டுப்பாடு

(i) ஆய்வுகூடத்தில் காணப்படும் 1,491 கிராம் பாரமான பிளட்டினம் உபகரணத்தின் இயலளவு மற்றும் பாரம் என்பவற்றின் பிரகாரம் வகைப்படுத்தப்படாதிருந்ததுடன், பொருட் பதிவேடும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி பிளட்டினத்தின் தூய்மை மற்றும் பெறுமதி என்பன சுயாதீன நிறுவனமொன்றினால் உறுதிப்படுத்தப்படாமல் பணியகத்தின் உத்தியோகத்தரினாலே மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2064 ஆம் இலக்க உருப்படியின் கீழான மூன்று உருப்படிகள் (50 cc dish ) பௌதீக பரிசோதனைக்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) பௌதீக பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட 5 வகையான 102 கிராம் பிளட்டினம் உபகரணங்கள் பொருட் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) மா ஓயா, அத்தனகலு ஓயா மற்றும் களணி கங்கை ஆகியவற்றை அண்மித்து மணல் மற்றும் மண் அகழ்வு மேற்கொள்ளும் போது அனுமதிப்பத்திர நிபந்தனைகள் மீறப்பட்டு சுற்றாடலுக்கு சேதங்கள் ஏற்படக்கூடிய வகையில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிந்த போதிலும், அது தொடர்பாக ஆராய்ந்து பார்க்காமல் அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பணியகத்தினால் நிறுவகத்தின் நோக்கங்களுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,786,640 தொகை பல்வேறு நவடிக்கைகளுக்காக வெளிநிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தன.

### 4.4 பதவியணியினர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 405 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 317 ஆகும். அதன் பிரகாரம் 88 வெற்றிடங்கள் நிலவின. பதவி நிலைத்தரமல்லாத மற்றும் சிற்றூழியர்கள் வெற்றிடங்கள் என்பன முறையே 54 மற்றும் 11 நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல், ஒப்பந்த அடிப்படையில் தனியார் கம்பனியிலிருந்து ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) உத்தியோகத்தர்கள் தலைமை அலுவலகத்தில் பிரிவுகளுக்கு இடையேயும் பிரதேச அலுவலகங்களுக்கிடையேயும் இட மாற்றம் செய்யும் முறைமையொன்று தயாரிக்கப்படாமையால் பிராந்திய அலுவலகங்களில் 8 ஆண்டுகளிலிருந்து 14 ஆண்டுகள் வரை நீண்டகாலமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) கம்பஹா பிரதேச அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் வருகை மற்றும் வெளிச்செல்லல் என்பவற்றை பதிவு செய்தல் தொடர்பாக 2013 ஆம் ஆண்டின் யூலை மாதத்தின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கை 2015 யூலை வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

2011 ஆம் ஆண்டின் போது பணியகத்தினால் வாகனங்களுக்காக பொருத்தப்பட்டிருந்த எரிபொருட் காட்டி மற்றும் திசைகருவி முறைமை கலற்றி அகற்றப்பட்டிருந்ததுடன், அவ்வுபகரணங்களுக்காக பணியகத்தினால் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 2,880,000 ஆக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 திசெம்பர் 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் அகழ்வு பிரிவின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 5.3 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2015 மே மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளிலான குறைபாடுகள் அவ்வப் பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) மனித வள முகாமைத்துவம்
(ஆ) அரசிறைப் பணத்தை அறவிடுதல்
(இ) அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
(ஈ) பொருட்பதிவேட்டுக் கட்டுப்பாடு
(உ) அகழ்வு நடவடிக்கைகள்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு